கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

***11-22-2014 சனிக்கிழமை Toronto இல் நடைபெற்ற கனடியத் தமிழரின் குருதிக்கொடை நிகழ்வு பற்றிய விபரங்கள்:***

சனிக்கிழமை 11-22-2014 நடைபெற்ற குருதிக்கொடை நிகழ்வில் முக்கிய விடயமாக பெருமளவில் தமிழர்களல்லாத வேற்றின மக்களும் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கினர். இன் நிகழ்வானது காலை 10 மணியிலிருந்து மாலை 3 மணிவரை நடைபெற்றது. மொத்தமாக 55 அலகு இரத்தம் சேகரிக்க எடுக்கப்பட்ட இந்த முயற்சியில் 54 அலகு இரத்தம் வழங்கப்பட்டிருந்தது. இது 98 வீத வெற்றியயை அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இன் நிகழ்வை தமிழ், ஆங்கில மற்றும் பிரென்சு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து அஞ்சலும் செய்திருந்தன. குறிப்பாக CBC, City TV, CTV ஆகிய ஊடகங்கள் நேரடியாக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

கனடிய தமிழர் தேசிய அவை ஒழுங்கு செய்த இக்குருதிக் கொடையில் கலந்து கொண்டு இரத்தம் வழங்கிய சகல மக்களுக்கும் கனடிய இரத்த வங்கி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

கனடியத் தமிழர் தேசிய அவை முன்னெடுக்கும் குருதிக்கொடை நிகழ்வானது வருடாவருடம் இரண்டு தடவைகள் நடைபெறுகின்றது. தமிழினப்படுகொலை மாதமான May மாதத்திலும், மற்றும் மாவீரருக்கான தேசிய நினைவெழுச்சி காலமான November மாதத்திலும் இடம்பெறுகின்றது.


கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)

தொலைபேசி: 416-830-7703 | மின்னஞ்சல்: info@ncctcanada.ca

முகநூல்: facebook.com/canadianncct